# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பச்சமுத்து | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | கந்தசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 13.6.2024.

A1, A3 present. A2 absent. Petition u/s.317 Cr.PC filed and allowed.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சங்ககிரி வட்டத்தில் ஆ.புதூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். கடந்த 21.05.2018 ம் தேதி அன்று வைகுந்தம் கிராமத்தில் பணியாற்றி வந்தேன். 21.05.2018 ம் தேதி மாலை 5.15 மணிக்கு நான் என்னுடைய அலுவலகத்தில் இருந்தபோது சங்ககிரி காவல் ஆய்வாளர் தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு வைகுந்தம் டோல்கேட் அருகில்

இருப்பதாகவும், வழக்கு சம்மந்தமாக 3 பேரை பிடித்து வைத்துள்ளதாகவும் விசாரணை செய்ய சாட்சியாக இருக்க அழைத்தன் பேரில் நானும் கிராம உதவியாளர் பெருமாளும் சென்றோம். அப்போது மணி 5.45 இருக்கும். அப்போது எதிரிகள் சந்திரசேகர், பிரகாஷ், அருண்(எ)அருண்குமார் ஆகியோர் அங்கு இருந்தார்கள். மாலை 5.45 மணிக்கு சந்திரசேகர் என்பவரை ஆய்வாளர் விசாரணை செய்தார். சந்திரசேகர் சொன்ன வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்துகொண்டார். அந்த வாக்குமூலத்தில் நானும் கிராம உதவியாளரும் கையொப்பம் செய்தோம். பின்னர் பாகப்பிரிவினை பத்திரம் ஒன்றை மேற்படி எதிரி ஒப்படைத்தார். அதை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அதில் உள்ள 2வது கையெழுத்து என்னுடைய உதவியாளரின் கையெழுத்து. மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆகும்.

பின்னர் 7.45 மணி அளவில் எதிரி பிரகாஷ் என்பவரை ஆய்வாளர் விசாரித்தார். விசாரித்து அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் 9.30 மணிக்கு எதிரி அருண் (எ) அருண்குமாரை ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரி பிரகாஷ் அளித்த வாக்குமூலத்தில் காளிப்பட்டி பிரிவு ரோட்டில் உள்ள மேம்பாலம் அருகில் கொலை செய்ய பயன்படுத்தி கயிறை புதரில் போட்டிருப்பதாகவும், என்னை அங்கே அழைத்து சென்றால் கயிறை எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். பின்னர் 10.30 மணிக்கு எதிரி பிரகாஷ் காளிப்பட்டி பிரிவு ரோட்டில் உள்ள மேம்பாலம் அருகில் முட்புதரில் இருந்து நைலான் கயிறை

எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். 10.30 மணி ஆகிவிட்டதால் காலையில் எங்களை வருமாறு சொல்லிவிட்டு ஆய்வாளர் போய்விட்டார். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. நைலான் கயிறை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகும். பிரகாஷ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 ஆகும்.

கைப்பற்றப்பட்ட நைலான் கயிறை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். மேற்படி நைலான் கயிறு சா.பொ.2 ஆகும். மறுநாள் 22.05.2018ம் தேதி காலை 10.30 மணிக்கு எடப்பாடி பிரசன்ன நஞ்சுண்டேஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான சைக்கிள் ஸ்டாண்டில் எதிரி சந்திரசேகர் அடையாளம் காட்டி எடுத்து கொடுத்த TN30 E 7502 என்ற யமாகா க்ரக்ஸ் மெரூன் கலர் இருசக்கர வாகனத்தை எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் நான் முதலாவதாக கையெழுத்து செய்துள்ளேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5, கைப்பற்றப்பட்ட மேற்படி வாகனத்தை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும்.

வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னையும் எனது உதவியாளர் பெருமாளையும் விசாரணை செய்தார்.

2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆய்வாளர் என்னை போனில் அழைத்ததாக கூறி இருக்கிறேன்.

ஆனால் ஆய்வாளரின் போன் எண்ணையும் எனது போன் எண்ணையும் நான் விசாரணையில் கூறிவில்லை என்றால் சரி. வைகுந்தம் டோல்கேட் என்பது ஒருபெரிய பகுதி என்றால் சரி. அந்த பகுதியில் எங்கே வைத்து ஆய்வாளர் எதிரிகளை விசாரித்தார் என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரி. சேலத்திலிருந்து கோயமுத்தூர் செல்லும் பகுதி அல்லது கோயமுத்தூரிலிருந்து சேலம் செல்லும் பகுதி மற்றும் டோல்கேட் அலுவலகம் இந்த பகுதிகளில் எங்கே வைத்து விசாரித்தார் என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரி.

கிராம நிர்வாக கையேடு படி எனது மேல் அதிகாரியான தாசில்தார், கோட்டாட்சியர் ஆகியோருக்கு தகவல் சொல்லிவிட்டு அனுமதி பெற்றுதான் விசாரணைக்கு செல்லவேண்டும் என்றால் சரி. இந்த வழக்கில் நான் எழுத்துமூலமான அனுமதி வாங்கவில்லை என்றால் செல்போன் மூலமாக பேசி அனுமதி வாங்கி சென்றேன். நான் எழுத்து மூலமான அனுமதி பெற்றுதான் வெளியே செல்லவேண்டும் என்றால் இல்லை. விடுமுறை எடுத்தால் மட்டும்தான் எழுத்து மூலமாக அனுமதி பெற வேண்டும். வழக்கு வழக்கு விசாரணைக்கு சென்று வந்தபின்னர் நான் சென்று வந்த விவரத்தை எழுத்து மூலமாக உயர் அதிகாரிகளுக்கும் நீதிமன்றத்திற்கும் தபால் வைக்க வேண்டும் என்றால் சரி. ஆனால் தகவல் மட்டும் நான் சொன்னேன். எதிரிகள் அளித்த வாக்குமூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. காளிப்பட்டி பிரிவு ரோடு மேம்பாலம் என்பது 4 ரோடுகள் கொண்டது என்றால் சரி. எந்த பிரிவு ரோடு அருகே எந்த புதரிலிருந்து

சான்று பொருளை எதிரி ஆஜர் செய்தார் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. அ.சா.ஆ 3 கைப்பற்றுதல் மகசரில் எனது கையொப்பத்திற்கு கீழ் உள்ள தேதியில் திருத்தம் உள்ளது என்றால் சரி. ஒரு வருவாய் வட்டத்திலிருந்து மற்றொரு வருவாய் வட்டத்திற்கு சாட்சியாக விசாரணைக்கு செல்லும்போது எனது உயர் அதிகாரிகளிடம் எழுத்து மூலமான அனுமதி பெற்று செல்லவேண்டும் என்றால் சரியல்ல. என் முன்னால் கைப்பற்றப்பட்ட கயிறில் ஏதாவது ரத்தக்கறை இருந்ததா என்றால் இல்லை. சைக்கிள் ஸ்டாண்டில் வாகனத்திற்கான டோக்கன் ஏதும் கைப்பற்றடவில்லை என்றால் சரி. எதிரிகள் என் முன்னிலையில் எந்தவித வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து என் முன்னிலையில் எந்த சான்று பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு தரப்பிற்கு வலுவூட்டுவதற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தழுவிக்கொள்ளப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.